2002 மே 3]

மக்கள் பங்களிப்புடன் கூடிய பணத் தொகையைக் கட்டி, அந்த ஊருக்கு குடிநீர் வசதி செய்துகொள்ள முடியாத ஒரு சூழ்நிலையில் வாழ்கிற ஆதிதிராவிடர், ஏழை மக்கள், தினக்கூலி மக்களாக அவர்கள் இருக்கின்றார்கள். ஆதலால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நம்முடைய தமிழக அரசினுடைய சார்பாக அந்த ஏழை மக்களுக்கு ராஜீவ் காந்தி குடிநீர் திட்டத்தின்கீழ் வராமல், தமிழ்நாடு அரசு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகவோ அல்லது வேறு ஏதாவது ஒரு திட்டத்தின் மூலமாகவோ, அந்த மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு நம்முடைய அரசு முயற்சி எடுக்குமா என்பதை தங்கள் வாயிலாக கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கேசவநாராயணபுரம் பகுதியில், ஏற்கெனவே தம்பிப்பேட்டை என்கிற ஊராட்சியில் பொதுமக்களுடைய பங்களிப்போடு ராஜீவ் காந்தி குடிநீர்த் திட்டத்தின் மூலமாக, மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டப்பட்டு வருகிறது. அந்தத் திட்டத்தின் மூலமாக கேசவநாராயணபுரம் பகுதிக்கு, குழாய்கள் பதித்து, தண்ணீர் விடுவதற்கு வேண்டிய வேலைகள் எல்லாம் நடைபெற்று கொண்டிருக்கின்றன. வேலைகள் விரைவாக நடந்து முடிகின்றபோது நிச்சயமாக கேசவநாராயணபுரம் பகுதி மக்களுக்கு போதுமான அளவு குடிநீர் வழங்கப்படும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 284, திரு. என். ரெங்கநாதன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

284—

புதிய பேருந்து நிலையம்

***2733—திரு. என். ரெங்கநாதன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, தரங்கம்பாடி பேரூராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பேருந்து நிலையம் அமைக்கப்படும்?

[2002 மே 3

மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பூம்புகார் தொகுதி, தரங்கம்பாடி பேரூராட்சியில் புதியதாக பேருந்து நிலையம் அமைப்பதற்கு நிலம் ஏதும் கையகப்படுத்தப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) வினா எழவில்லை.

முற்பகல் 10-45

திரு. என். ரெங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதி தரங்கம்பாடி பேரூராட்சி, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே டேனிஷ்காரர்களால் ஆட்சி புரிந்த இடமாகும். வரலாற்றுச் சிறப்பு மிக்க பகுதி. இது ஒரு தேர்வுநிலைப் பேரூராட்சியாகும். பேரூராட்சிக்கு நிரந்தர பேருந்து நிலையம் இதுவரை அமைக்கப்பெறவில்லை. தரங்கம்பாடி வட்டத்தின் தலைமையிடமாகவும் உள்ளது. அங்கே இரண்டு கல்லூரிகளும், இரண்டு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளும், இரண்டு உயர்நிலைப் பள்ளிகளும் இருக்கின்றன. இதற்கும் மேலாக, சுற்றுலாத் தலமாகவும் இருக்கிறது. உலகத்திலேயே ஓசோன் காற்று வரக்கூடிய இடங்களிலே தரங்கம்பாடி கடற்கரைப் பகுதியும் ஒன்றாகும். வெளிநாட்டுப் பயணிகளும் நிறைய சுற்றுப்பயணம் வந்து செல்கின்றனர். ஆகவே, இந்த இடத்தில் அரசு ஒரு நிரந்தர பேருந்து நிலையத்தை அமைத்துக் கொடுப்பதற்கு ஆவன செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சியின் மூலமாக இடத்தைத் தேர்வு செய்து அரசுக்கு அவர்கள் தீர்மானம் மூலமாக அனுப்புகின்றபோது, அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 285, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.